1993 ஏப்ரல் 26]

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்தில் ஹைகோர்ட்டில் ரிட் போட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டாமல் நின்று விட்டது. அதற்காகத்தான் கேள்வி எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையால் அந்த ஸ்டே எல்லாம் முறியடிக்கப் பட்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாது காக்கப்பட்ட நீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஏறத்தாழ 5,000 மக்கள் தொகை கொண்ட அந்தக்கிராமத்தில் கொடுத்ததற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன் றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது என்ற காரணத் தாலும், தற்போது மக்கள் தொகை அதிகமாக விரிவடைந்து இருக்கிற காரணத்தாலும், மேலும் அதிகமான பாயிண்டுகள், அதிகமான குழாய் இணைப்புகள் ஏற்படுத்தித் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 471 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

471—

நரசிங்கபுரம்—பட்டியாக்கவுண்டனூர் சாலையைத் தார்ச்சாலை யாக மாற்றும் திட்டம்.

*11111—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள பழுதடைந்த சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம்—கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வரையில் செல்கிற அந்தச் சாலையில் சுமார் 1½ கிலோ மீட்டர் கோடங்கிப் பட்டி வரையில் மண் சாலையாகவும், அதற்குப் பிறகு பட்டியாக் கவுண்டனூர் வரையில் மெட்டல் சாலையாகவும் உள்ளது. தென் மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவமழை இரண்டும் பெய்கிற அந்தப் பகுதியில், இந்த இரண்டாண்டு காலத்தில் பெய்த மழை யால் சாலைகள் போக்குவரத்துக்கு லாயக்கற்றதாக மாறியிருக் கின்றன. கோடங்கிப்பட்டி கிராமம் மிகவும் தள்ளி உள்ளே இருக்கிற கிராமம். இன்று வரையில் பஸ் வசதி இல்லாத ஒரு கிராமமாக அந்தக் கிராமம் இருந்து வருகிறது. எனவே, அதற்கு தார்ச் சாலை போட்டால், தற்போது ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் ராமபட்டினத்திலிருந்து காவணம் வரையில் செல்கிற அந்தச் சாலை பட்டியாக் கவுண்டனூர் வரை தொட்டு செல்கிற காரணத் தால் அங்கேயுள்ள மக்களுக்கு உதவியாக, அந்த சுற்று வட்டார கிராமங்கள் அனைத்துக்கும் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கும். சாலை வசதி சரியாக இல்லாத காரணத்தால் இன்றைக்கு புதிய பஸ் விடக்கூடிய வாய்ப்புகூட இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்க அடுத்த ஆண்டிலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டில் சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தச் சாலை தார்ச்சாலை யாக மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலை யாக மாற்றிக் கொடுக்க ஒப்புதல் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்கு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 472 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

472—

சேரன்மாதேவி தொகுதி கிராமங்களுக்குத் தாமிரபரணி ஆற் றிலிருந்து குடிநீர் வழங்கல்.

*12858—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—